பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 04 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் ஊழல் மலிந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

3. மக்களின் ஆதரவோடு தமிழகத்தில் திமுக தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. எத்தகைய சூழ்நிலையிலும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு தடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar**, தேர்தல் ஆணையர்கள் திரு **Sandhu**, டாக்டர் **Vivek Joshi**, நேற்று தேர்தல் பார்வையாளர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டனர்.

வாக்குப்பதிவின்போது மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகள் குறித்து வாக்குச்சாவடி அதிகாரிகள் முழுமையாக அறிந்துகொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினர்.

வாக்குச்சாவடிகளை வெப் கேமரா மூலம் கண்காணிப்பது முழுமையாக செயல்படுகிறதா என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள வேண்டும் என்றும் இதில் அறிவுறுத்தப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் ஊழல் மலிந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

அவினாசி தொகுதியில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் கனிம வளம், டாஸ்மாக், அரசுப் பணியிட மாறுதல் என எங்கும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்தார்.

பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதாகவும், வேலைவாய்ப்பில்லாமல் இளைஞர்கள் அவதிப்படுவதாகவும் அவர் கூறினார்.

அஇஅதிமுக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றால் அரசு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும் என்றும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

மக்களின் ஆதரவோடு தமிழகத்தில் திமுக தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில்

வெற்றி பெற்றதை விட அதிக தொகுதிகளில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி மாநிலத்தில் நெல்லுக்கான ஊக்கத்தொகையை திமுக அரசு உயர்த்தி வழங்கியதாகவும், இதனால் 30 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும் திரு. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடன் ரத்து செய்யப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஏற்கனவே அஇஅதிமுக ஆட்சி இருந்தபோது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டதை நினைவுகூர்ந்தார்.

திமுக ஆட்சியில் மின் கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதோடு, மின்தேவை அதிகமாக உள்ள நேரங்களில் வர்த்தகத்திற்கான மின் கட்டணத்தை இரண்டு மடங்காக உயர்த்தி வசூலிக்கப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் திமுக தேர்தல் அறிக்கை அமைந்துள்ளதாக தேமுதிக தலைவர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

தருமபுரியில் நேற்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மகளிருக்கான **8** ஆயிரம் ரூபாய் கூப்பன் திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **5** லட்சம் மானியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், பால் கொள்முதல் விலை லிட்டருக்கு **5** ரூபாய் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் வாக்காளர்களைக் கவர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு அருண் இடமாற்றம் செய்யப்பட்டு அவருக்கு பதிலாக திரு **Abhin Dinesh Modak**-ஐ தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட திரு அருணுக்கு தேர்தல் தொடர்பான எவ்வித பணியும் வழங்கக்கூடாது என்றும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ராணிப்பேட்டை மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 75 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

எத்தகைய சூழ்நிலையிலும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு தடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்று இந்நிறுவனங்களின் விநியோகஸ்தர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நிறுவனத்தின் தலைவர் திரு. சஹானி, 21 இடங்களில் இருந்து கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு இறக்குமதி செய்யப்படுவது தற்போது 41 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஒரு குறிப்பிட்ட நாட்டை மட்டும் நம்பியிருக்காமல் பல்வேறு நாடுகளில் இருந்து இப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் பொதுமக்கள் கவலையடைய தேவையில்லை என்று அவர் தெரிவித்தார்.

குஜராத் முதல் ஒடிசா வரை அமைக்கப்பட்டுள்ள உயிரி எரிபொருள் ஆலைகளில் இருந்து 30 முதல் 40 சதவீதம் வரை உயிரி எரிவாயுவை பெற்றுக்கொள்ளும் வசதி உள்ளது என்றும் அவர் கூறினார்.

குறைந்த செலவில் கிடைக்கக் கூடிய இந்த எரிவாயுவை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவனம் மேம்படுத்தி வருவதாகவும் திரு. சஹானி தெரிவித்தார்.

<<<<>>>>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஏனைய பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே காணப்படும் என்றும், அதிகபட்ச

வெப்பநிலை ஓரிரு இடங்களில் இரண்டு முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானுடன் பேச்சுகள் நடத்துவதற்காக அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vanes** பாகிஸ்தான் செல்வதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

---------------

வளைகுடா போரை தொடங்கியது அமெரிக்காவும், இஸ்ரேலும்தான் என்று ஈரான் கூறியுள்ளது.

---------------

நாடு முழுவதும் உள்ள துறைமுகங்களின் செயல்பாடுகளை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் நேற்று உயரதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

---------------

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் அதன் பலன்களை ஒரு மாதத்திற்குள் மீண்டும் வழங்க வேண்டும் என்று மாநில அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

---------------

நாடு முழுவதும் வந்தே பாரத் ரயில்களில் கடந்த நிதியாண்டில் 3 கோடியே 98 லட்சம் பேர் பயணித்துள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

---------------

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்த பின்னர் திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 15 கோடி ரூபாய் ரொக்கமும், 64 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி சியாமளா தேவி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

---------------

கோடைகால நெரிசலைக் கருத்தில் கொண்டு சென்னை - திருநெல்வேலி இடையே வரும் 16, 23, 30 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

---------------

சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் நேற்று நடத்திய சோதனையின்போது உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட 23 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

---------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ராஜஸ்தான் அணி, 18 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**